Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் /துணை இயக்குநர் (மு.கூ.பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.T. முருகன், பி.இ.,

ந.க.எண்.4429/2021/திமா நாள். .02.2022

பொருள்: **மனைப்பிரிவு** - நகர் ஊரமைப்புத்துறை - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருப்பூர் மாவட்டம் - தாராபுரம் வட்டம் -தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் -அலங்கியம் ஊராட்சி மற்றும் கிராமம்-ரீ.ச.எண்கள்.182/1A4A, 182/3-ல் 4.70 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர் திரு.R.சபாபதி (ம) 3 நபர்கள், தாராபுரம் என்பவர்களது இணைய தள விண்ணப்பம் எண்.202102801014596 நாள் 17.08.2021 மற்றும் இணைப்புகள் (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 08.11.2021)
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.4429/2021/திமா, நாள் 12.01.2022. (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது)
3. தானப் பத்திரம் ஆவணம் எண். 745/2022 நாள்.27.01.2022
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.31.01.2020.
5. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.05.2017.
6. வேளாண்மை இணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்கள் கடிதம் இ2/8946/2021, நாள்.22.10.2021
7. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020.
8. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
9. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/BA2 நாள் 14.08.2021.
10. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/BA1 நாள் 08.09.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி நாள் 28.09.2017.
13. இவ்வலுவலக கேட்பு கடிதம், இதே எண், நாள்.04.02.2022.
14. மனுதாரர் நன்னிலை வரி செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள். 08.02.2022

உத்தரவு :

01. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட மேற்காண் பொருளில் கண்ட திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் -தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் -அலங்கியம் ஊராட்சி மற்றும் கிராமம்-ரீ.ச.எண்கள்.182/1A4A, 182/3-ல் 4.70 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 12.01.2022 -ன் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டதன்படி மனைப்பிரிவு பூங்கா, சாலை பகுதிகள், (மூலை முடக்குகள் உட்பட) மற்றும் (A) LOCAL BODY & (B)TANGEDCO-க்கான பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண். 745/2022 நாள்.27.02.2022 -ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

02 மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.(திமா)எண்.72/2022** என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடங்கள், மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்-2 தொகுப்பு, அசல் தானப்பத்திரம்-2 ஆகியன மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

03. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.10(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

04. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

05. செயலாணை கடிதம்,மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -2 தொகுப்பு, அசல் தானப்பத்திரம்-2 ஆகியன பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. (a) பார்வை 7-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4-ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body"

2. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3 பார்வை 12-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தின்படி The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பில் நிலப்பயன்மாற்ற கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் மனுதாரரிடமிருந்து வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

கணக்குத் தலைப்பு

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts
AS Receipts under Land use conversion charges
227 Non Taxation fees – 09 collections
(**IFHRMS Code** : 0217 60 800 AS 227 09)

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/
துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

இணைப்பு :

1) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -2 தொகுப்பு
2) பார்வை 3-ல் காண் அசல் தானப்பத்திரம்-2

பெறுநர்

தலைவர்,
அலங்கியம் ஊராட்சி மற்றும் கிராமம்
தாராபுரம் வட்டம்
திருப்பூர் மாவட்டம்.

நகல் (**உள்ளாட்சி வழியாக**)

திரு.R.சபாபதி (ம) 3 நபர்கள்
எண்.9 ராஜேந்திரா நகர்
தாராபுரம் டவுன்
திருப்பூர் மாவட்டம் 638656

நகல் (வரைபடத்துடன்)

1. உதவி இயக்குநர்,
   நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
   மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
   திருப்பூர் மாவட்டம்.

2. வட்டாட்சியர்,
   தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகம்,
   தாராபுரம் வட்டம்,
   திருப்பூர் மாவட்டம்.

நகல் (தகவலுக்காக)

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No 1 A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai - 600008.

கு.தேவிகுப்பு

தலைவர், அலங்கியம் ஊராட்சி,
அலங்கியம் [அஞ்], தாராபுரம் [வ], திருப்பூர் மாவட்டம் – 638 657.
செல் : 86081 45406, 86810 35158.

-125-

பெறுநர்:

R.சபாபதி மற்றும் மூன்று நபர்கள்
தாராபுரம் டவன்
தாராபுரம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்

தேதி : 12.7.2022

ஐயா,

பொருள் : குடியிறுப்பு மனைப்பிரிவு -திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டாரம் - அலங்கியம் ஊராட்சி- அலங்கியம் கிராமம் க.ச.எண்கள் 182/1A4A மற்றும் 182/3-ல் 4.70 ஏக்கர் (அ) 19020.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிறுப்பு மனைப்பிரிவிற்க்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் தொகை செலுத்த கோருதல் - தொடர்பாக

பார்வை : 1. நகர் ஊரமைப்பு இணை இயக்குனர்/துணை இயக்குனர் (மு.கூ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குனர் ந.க.எண் 4429/2020 திமா நாள் 06.07.2021

2. தாராபுரம் சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திர ஆவணம் எண் 745/2022/தி.ம நாள் 27.01.2022

3.அலங்கியம் ஊராட்சி மன்ற தீர்மான எண் 28/2022 நாள் 11.7.2022.

திருப்பூர் மாவட்டம் தாராடரம் வட்டாரம் - அலங்கியம் ஊராட்சி- அலங்கியம் கிராமம் க.ச.எண்கள் 182/1A4A மற்றும் 182/3-ல் 4.70 ஏக்கர் (அ) 19020.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் திரு R.சபாபதி மற்றும் மூன்று நபர்கள் தாராபுரம் அவர்கள் குடியிறுப்பு மனைகள் அமைத்துக்கொள்ள பார்வை 1-ல் காணும் திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதியின்படி **ம.வ./ந.ஊ.(தி)மா) எண்** 72/2022 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனை வழங்கிய வரைபடத்திற்கு பார்வை 3- ல் காணும் ஊராட்சி மன்ற தீர்மானத்தின்படியும் மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் பெற மேற்படி மனைப்பிரிவு ஏற்படுத்தப்படும் காலைக்கு சார்பதிவாளர் அலுவலக சந்தை மதிப்பு மற்றும் நாளது தேதியில் வில்லங்கசான்றுகளுடன் கீழ்காணும் படி தொகைகள் செலுத்தி இரசீதின் நகலையும் ஊராட்சியில் வழங்க இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

1. நில உபயோக மாற்றத்திற்கான தொகை சந்தை மதிப்பில் 3% உரிய அரசு தலைப்பில் செலுத்தி இரசீதின் நகல் இணைக்கப்படவேண்டும்
2. பரிசீலனை கட்டணம் ரூ 1000/- ஊராட்சியில் பல்வகை இரசீது மூலம் செலுத்தி இரசீதின் நகல் இணைக்கப்படவேண்டும் .
3. அபிவிருத்திக்கட்டணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது இடங்களில் 1 சென்ட்டிற்கு ரூ 550/- வீதம் 158 சென்ட்க்கு ரூ 86900/- ஊராட்சியில் பல்வகை இரசீது மூலம் செலுத்தி இரசீதின் நகல் இணைக்கப்படவேண்டும் .

தலைவர்
அலங்கியம் ஊராட்சி

அலங்கியம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : திருமதி K.தேவிகுப்பு தலைவர்.

அனுமதி எண் . 1/2022-2023 நாள் : 15.7.2022

பொருள் : குடியிறுப்பு மனைப்பிரிவு -திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டாரம் - அலங்கியம் ஊராட்சி- அலங்கியம் கிராமம் க.ச.எண்கள் 182/1A4A மற்றும் 182/3-ல் 4.70 ஏக்கர் (அ) 19020.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிறுப்பு மனைப்பிரிவிற்க்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை :

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குனர்/துணை இயக்குனர் (மு.கூ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குனர் ந.க.எண் 4429/2020 திமா நாள் 06.07.2021
2. தாராபுரம் சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திர ஆவணம் எண் 745/2022/தி.ம நாள் 27.01.2022
3. அலங்கியம் ஊராட்சி மன்ற தீர்மான எண் 28/2022 நாள் 11.7.2022

உத்திரவு :-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டாரம் - அலங்கியம் ஊராட்சி- அலங்கியம் கிராமம் க.ச.எண்கள் 182/1A4A மற்றும் 182/3-ல் 4.70 ஏக்கர் (அ) 19020.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் திரு R.சபாபதி மற்றும் மூன்று நபர்கள் தாராபுரம் அவர்கள் குடியிறுப்பு மனைகள் அமைத்துக்கொள்ள பார்வை 1-ல் காணும் திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதியின்படி **ம.வ./ந.ஊ.(திமா) எண் 72/2022** என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனை வழங்கிய வரைபடத்திற்கு பார்வை 3- ல் காணும் ஊராட்சி மன்ற தீர்மானத்தின்படியும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை மற்றும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர்(பொ) திருப்பூர் மண்டலம் அவர்களின் பார்வையில் காணும் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.
2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது.
3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்படவேண்டுமென அறிவித்தாலும்,கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அடிப்படை வசதிகளில் ஏதும் மாற்றம் இருந்தாலும் அதற்கான தொகை அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.
4. மனைப்பிரிவில் அமையும் மனைகள் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற்று கட்டப்படவும்,கட்டிடப்பணி முடிவுற்றவுடன் வீட்டு வரி செலுத்தவும் வேண்டும்.
5. மனைப்பிரிவில் அமைக்கப்படும் ஒவ்வொரு கட்டிடத்திலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

6. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
7. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபாதத்திற்கு உட்பட்டவராவர்.
8. மனைப்பரிவு வரைபட்த்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 6'*4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.
10. வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.
11. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
12. நில உபயோக மாற்றத்திற்கான தொகை சந்தை மதிப்பில் 3% ரூ 22673/- செ.எண் 20220712006099 நாள் 12.7.2022 ன்படி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
13. பரிசீலனை கட்டணம் ரூ 1000/- பல்வகை இரசீது எண் 2307 நாள் 13.7.2022 ன்படியும் மற்றும் அபிவிருத்திக்கட்டணம் 1 சென்ட்டிற்கு ரூ 550/- வீதம் 158 சென்ட்க்கு ரூ 86900/- ஊராட்சியின் பல்வகை இரசீது எண் 2308 நாள் 13.7.2022 ன்படி ரூ 69300.00 மற்றும் பல்வகை இரசீது எண் 2309 நாள் 15.7.2022 ன்படி ரூ 17600.00 ம் தொகை செலுத்தப்பட்டுள்ளது.
14. பார்வை 1 -ல் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும் இதன் நகல் வீட்டு மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
15. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டாலோ,அல்லது நாளது தேதியில் வழக்குகள் நடைபெற்று வருவதாக பின்னர் தெரிய வந்தாலோ வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கான அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

தலைவர்
அலங்கியம் ஊராட்சி


இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம் 1
மனைப்பிரி நிபந்தனைகள் 1

பெறுநர்:

R.சபாபதி மற்றும் மூன்று நபர்கள்
தாராபுரம் டவுன்
தாராபுரம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்

நகல் : 1. நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் (பொ) திருப்பூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கபடுகிறது.
3. சார்பதிவாளர் ,சார்பதிவாளர் அலுவலகம் தாராபுரம்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) தாராபுரம்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate